(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023

# National Field Work Centre, Thondaimanaru.

NFWC

## 2nd Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| மனைப்பொருளியல் - I, II<br>Home Science - I, II | Three Hours<br>Gr : 12 (2024) | 28 | T | I,II |

### பகுதி I

❖ **சரியான விடையினைத் தெரிவு செய்க.**

01) பின்வருவனவற்றில் வாழ்க்கைச் சூழல் நிர்மாணிப்பின் முக்கியத்துவமாக நீர் கருதுவது,
1. கட்டடங்கள் மற்றும் நிலத்தோற்ற நிருமாணிப்பு
2. பௌதீக, சமூக, உள நெருக்கிடைகளை இழிவாக்குதல்
3. உள்ளக வெளி நிர்மாணிப்பு
4. நகரச்சூழல் நிர்மாணிப்பு
5. வாழும் சூழலின் பாதுகாப்பான நிர்மாணிப்பு

02) பின்வரும் கூற்றுக்களுள் "பொருத்தப்பாடு" எனும் பயன்பாட்டுக் காரணியுடன் தொடர்புடையது,
1. வதிவோர் மற்றும் பயன்படுத்துவோரின் மனப்பாங்குடன் பொருந்தியமைதல்.
2. கால வெளியைத் தீர்மானித்தலும் நியமங்களுடன் பொருந்தியமைதலும்.
3. பௌதீகச் சூழலுடன் பொருந்தியமைதல்
4. சூழற்கூறுகளின் அளவுகளுடனும் ஏனைய கட்டடங்களின் அளவுகளுடனும் பொருந்தியமைதல்.
5. ஏற்கனவே உள்ள பெறுமானத் தொகுதிகளை மதித்தல்.

03) செயலூக்கம், சந்தம், வலிதம் போன்ற உணர்வுகளை வெளிக்கொணரும் கோடு,
1. நிலைக்குத்துக் கோடு  2. கிடைக்கோடு  3. வளைகோடு
4. வளைநெளி கோடு  5. சரிவுக்கோடு

04) நாகரிகத்தின் பொற்காலம் எனக் கருதப்படுவது,
1. 1960 – 1970  2. 1750 – 1965  3. 1850 – 1960
4. 1755 – 1960  5. 1990 – 2005

05) பின்வருவனவற்றில் மென்நிலத்தோற்ற வடிவமைப்பாக அமைவது,
1. தாவரங்கள்  2. படிக்கட்டுக்கள்  3. பாலங்கள்
4. சிலைகள்  5. தடாகம்

06) புவி மீது பரவலாகக் காணப்படும் சேதன மூலக்கூறு பின்வருவனவற்றுள் எது?
1. கிளைக்கோஜன்  2. இலைசீன்  3. குளுக்கோசு
4. மாப்பொருள்  5. செலுலோசு

07) A – அலனின், செரின்  B – ஆஜினைன், இலைசீன்
C – சிற்றீன், திரியோனின்  D – இத்திடீன், வலின்
E – திரித்தோபேன், குளூட்டமின்
மேற்குறிப்பிட்ட அமினோ அமில வகைகளில் அத்தியாவசிய அமினோ அமிலம் அடங்கிய கூட்டம் எது?
1. A  2. B  3. C  4. D  5. E

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

08) விற்றமின் $B_{12}$ இன் இரசாயனப் பெயர் யாது?
1. நயசின் 2. சயனோகொபலமின் 3. கல்சிபெரோல்
4. பிரிடொக்சின் 5. தயமின்

09) தசைகளின் தொழிற்பாட்டுக்கு அவசியமான புரதம் யாது?
1. கெரற்றின் 2. கொலசன் 3. கோட்டிசோன்
4. அக்ரின் 5. ஈமோக்குளோபின்

10) குளுக்கோசை இனங்காண்பதற்கான சோதனையில் ஐதான சீனிக்கரைசலுடன் சேர்க்க வேண்டிய கரைசல் யாது?
1. அயடீன் 2. பொட்டாசியம் ஐதரொட்சைட்
3. பெனடிக் கரைசல் 4. சூடாண் 3 5. சல்பேற்று

11) கல்சியம், மக்னீசியம் அகத்துறிஞ்சல் சிறப்பாக நடைபெறுவதற்கு தேவையான விற்றமின் எது?
1. விற் C 2. விற் K 3. விற் A 4. விற் E 5. விற் D

12) பின்வருவனவற்றில் தனிநிரம்பாக் கொழுப்பமிலமாகக் காணப்படுவது யாது?
1. லினோலெனிக்கமிலம் 2. ஒலேயிக்கமிலம் 3. லினோலெயிக்கமிலம்
4. மிஸ்டிக்கமிலம் 5. கப்ரிலிக்கமிலம்

13) BMI 25.0 – 30 வரை எனும் பெறுமானத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிவது,
1. உயரத்திற்கேற்ற நிறை இல்லை 2. உயரத்திற்கேற்ற நிறை உண்டு
3. உயரத்தை விட நிறை அதிகம் 4. உயரத்தை விட மிக நிறை அதிகம்
5. வயதுக்குப் பொருத்தமான உயரமின்மை

14) விற்றமின் A குறைபாடு காரணமாக ஏற்படும் நோய்கள்
1. என்புருக்கி, என்புக்கோறை 2. குருதியுறையா நோய், பெலகரா
3. ஸ்கேவி நோய், குருதிச்சோகை 4. மாலைக்கண், தோல் உலர்வு
5. பெலகரா, மலேரியா நோய்

15) போசணை மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொது அமைப்பு எது?
1. யுனிலிவர் இலங்கை 2. உணவு விவசாய தாபனம்
3. கல்வி அமைச்சு 4. மாகாண சுகாதார அமைச்சுக்கள்
5. உலக உணவு நிகழ்ச்சித்திட்டம்

16) ஆரோக்கியமான நபர் ஒருவரின் சக்தித் தேவையை ஈடு செய்ய போதுமான போசனைக் கூறுகள் அடங்கியுள்ள முழுமையான உணவுப் பங்கீடு எவ்வாறு அழைக்கப்படும்?
1. உணவுப்பாகம் 2. உணவுப்பிரமிட்டு 3. உணவுத்தட்டு
4. போசனைத்தேவை அட்டவணை 5. நிறை உணவு

17) காலை உணவு உட்கொள்வதற்கு முன் பருகுவதற்கு உகந்த போசனை மிக்க பானம் எது?
1. இலைக்கஞ்சி 2. பால் 3. சூப் 4. தேநீர் 5. கோப்பி

18) கொழுத்த நிலையில் உள்ளவர்கள் சேர்க்க வேண்டிய உணவுகள்
1. பன்றி இறைச்சி 2. பெரிய மீன், தவிட்டுப்பாண்
3. காய்கறிகள், பழங்கள் 4. ஆட்டாமா, பெரிய மீன்கள்
5. இனிப்புணவுகள், கீரை வகைகள்

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

19) பின்வருவனவற்றுள் இரைப்பை அழற்சி நோயின் அறிகுறிகள்
   1. கால்களில் புலக்கூர்மை குறைவடைதல்
   2. சிறுநீரகங்கள் செயழிலத்தல்
   3. கண்கள் சிவத்திருத்தல்
   4. காய்ச்சல், தலைவலி
   5. குமட்டல், தலைவலி

20) இதயத்திலிருந்து மூளைக்கு குருதியை விநியோகிக்கும் குருதிக்கலன்கள் தடைப்படுவதால் அல்லது வெடிப்பதால் ஏற்படும் நோய்?
   1. இதயநோய்
   2. சிறுநீரக நோய்
   3. சோர்வாதம்
   4. உயர்குருதியமுக்கம்
   5. தலைவலி

21) சமையலறையில் தூசி, அழுக்கு, எண்ணெய் போன்றவற்றை அகற்ற பயன்படுத்தும் சுத்திகரிக்கும் பொருள்
   1. நீர்
   2. கிருமிகொல்லி
   3. அழுக்ககற்றிப் பொருட்கள்
   4. அமில சுத்திகரிப்பான்
   5. பெற்றோல்

22) எவ் இறைச்சியில் நாடாப்புழு காணப்படும்
   1. ஆட்டிறைச்சி
   2. ஆமை இறைச்சி
   3. கோழி இறைச்சி
   4. மான் இறைச்சி
   5. மாட்டிறைச்சி

23) ஈகொலாய் என்பது,
   1. பற்றீரியா
   2. பங்கசு
   3. வைரசு
   4. மதுவம்
   5. புழுவகை

24) பாண் மாக்குழையல் பயன்படுத்தி தயாரிக்கக் கூடிய சிற்றுண்டி வகை
   1. கிறீம் பணிஸ்
   2. பேஸ்ரி பாஸ்கட்
   3. ஹாட்டோக்
   4. பற்றீஸ்
   5. றோள்ஸ்

25) உணவு தயாரிக்கையில் பயன்படுத்தும் சேர்மானப் பொருட்களில் செயற்கை சுவையூட்டி அல்லாதது,
   1. அஜினாமோல்ற்
   2. சக்கரின்
   3. குளூட்டமோற்று
   4. சாதிக்காய்
   5. மொனோசோடியம்

26) நெசவு உற்பத்தியில் முற்பரிகரிப்பு செய்யும் சரியான படிமுறைகளாவன,
   1. பொசுக்கல், கழுவல், பசை நீக்கல், வெளிற்றல்
   2. கழுவல், பசைநீக்கல், பொசுக்கல், வெளிற்றல்
   3. நாரை எரித்தல், கஞ்சியிடல், கறை நீக்கல், வெளிற்றுதல்
   4. பசை நீக்கல், கழுவல், பொசுக்கல்,வெளிற்றுதல்
   5. கஞ்சியிடல், வெளிற்றல், கறை நீக்கல், கழுவல்

27) நூல் கழன்று போகத்தக்க விளிம்புகளை நேர்த்தி செய்ய பயன்படும் தையல்
   1. ஓவர்லொக் தையல்
   2. மறைப்புத்தையல்
   3. கைத்தையல்
   4. தனி நூல் சங்கிலித்தையல்
   5. கைத்தையல்

28) மேசை விரிப்பானது மேசை விளிம்பிலிருந்து கீழே விழவிடும் அளவு,
   1. 20cm
   2. 38cm
   3. 37cm
   4. 36cm
   5. 34cm

29) வளைவான ஊசி பயன்படுத்தப்படும் தையல் முறையானது,
   1. ஓவர்லொக் தையல்
   2. கைத்தையல்
   3. மறைப்புத்தையல்
   4. தனி நூல் சங்கிலித் தையல்
   5. இடைப்பூட்டு எந்திரத் தையல்

30) இறக்கை எரிவது போன்ற மணம் வெளிப்படும் துணி வகை?
   1. கம்பளி
   2. பட்டு
   3. அக்கிரிலிடுக்கு
   4. நைலோன்
   5. லினன்

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

*01)*

(1) சமூக வாழ்க்கைச் சூழல் என்பதை அறிமுகஞ்செய்க.
(2) முழுப்புரதம் என்றால் என்ன? உதாரணம் தருக.
(3) கிழங்கு வகைகளில் அடங்கியுள்ள நிர்ப்பீடனத்தை அதிகரிக்கும் ஒட்சியெதிரிகள் எவை?
(4) உமிழ் நீர்ச் சுரப்பிகள் எத்தனை? அவை எவை?
(5) ஈம் அல்லாத இரும்பு உணவுகள் 4 தருக.
(6) இலங்கை மக்களுக்குப் பொருத்தமான நாளாந்த போசணைத்தேவை அட்டவணையை விதந்துரைப்புச் செய்த அமைப்புக்கள் எவை?
(7) குருதியில் உள்ள குளுக்கோஸ் மட்டத்தை சீராக்கம் செய்யும் ஓமோன் எது? எங்கு உற்பத்தி செய்யப்படுகின்றது?
(8) உணவு நஞ்சடைதலுக்கு காரணமான நோயாக்கி நுண்ணுயிர்கள் எவை?
(9) நெசவு உற்பத்தியில் காரிக்கன் துணி முற்பரிகரிப்பு செயற்பாடுகள் எவை?
(10) அலங்காரத்தையல் முறைகள் 4 குறிப்பிடுக?
(11) விசேடமான நார்கள் 2 தருக. *(11 × 2 = 22 புள்ளிகள்)*

*02)*

(1) பௌதீகச் சூழமைவின் இரண்டு வகைகளையும் குறிப்பிட்டு விளக்குக.
(2) புறவெளி வடிவமைப்பின் போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள் 4 குறிப்பிடுக.
(3) வீடொன்றிற்கு தளபாடங்களைத் தெரிவு செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய 4 விடயங்களைக் குறிப்பிடுக.

*(4 + 4 + 4 = 12 புள்ளிகள்)*

*03)*

(1) ஓர் உணவுப்பட்டியலைத் தயாரிக்கையில் கருத்திற் கொள்ள வேண்டிய 4 காரணிகளை தருக.
(2) பழங்களை உட்கொள்வதன் முக்கியத்துவம் 4 தருக.
(3) இதய நோயாளி ஒருவருக்குப் பொருத்தமான ஒரு நாளுக்கான உணவுப் பட்டியலைத் திட்டமிடுக. *(4 + 4 + 4 = 12 புள்ளிகள்)*

*04)*

(1) உபகரணங்களுக்காகப் பயன்படுத்தும் மூலப்பொருட்களைத் தெரிவு செய்வதில் கவனிக்க வேண்டிய விடயங்கள் 4 தருக.
(2) உணவு நஞ்சாதலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 4 தருக.
(3) சேர்மானப் பொருட்கள் என்றால் என்ன? அவை உணவு உற்பத்தியின் போது எவ்வடிவங்களில் பயன்படுத்தப்படுகின்றன. *(4 + 4 + 4 = 12 புள்ளிகள்)*

*05)*

(1) நவநாகரிகப்பாணி வடிவமைப்புக்கெனத் தகவல்களைப் பெறத்தக்க மூலாதாரங்கள் 4 பெயரிடுக.
(2) ஆடைக் கைத்தொழிலுடன் இணைந்த பிற கைத்தொழில்கள் எவை?
(3) விளிம்பு மூடித்தைத்தலை அறிமுகஞ்செய்க. *(4 + 4 + 4 = 12 புள்ளிகள்)*

*06)*

(1) நீரின் முக்கியத்துவம் 4 தருக.
(2) உணவு சமிபாட்டுத் தொகுதி என்றால் என்ன?
(3) இரும்புச்சத்து உடலினால் அகத்துறிஞ்சப்படுவதை அதிகரிப்பதற்கு கையாளத்தக்க விடயங்கள் 4 குறிப்பிடுக. *(4 + 4 + 4 = 12 புள்ளிகள்)*